## இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் - 2013

இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 36(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் ரூபா 2,396,227 தொகையான முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் ஆரம்ப மீதியில் சீராக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவில் சீராக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மானியமாகக் கிடைத்த இரண்டு வான்கள் அரசாங்க மானியமாகக் கருதப்படாது நிறுவகத்தின் நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதியை கணக்கு வைக்கும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக காப்புறுதிக்காக மேற்கொள்ளப்பட மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 15,200,000 உரித்தாக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது நிறுவகத்திலிருந்து அகற்றும் நோக்கத்துடன் நடைமுறைச் சொத்தின் கீழ் முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 26,624,391 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் மரத் தளபாடங்களிலிருந்து ரூபா 24,915,351 பெறுமதியான சொத்து விடயங்கள் அகற்றப்படாமல் மீளய்வாண்டின் போதும் நடைமுறைச் சொத்தின் கீழ் முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

(இ) நிறுவகத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 57,848 கூட்டுத்தொகையான பிரயாணச் செலவுகள் அட்டுறு செலவினத்தின் கீழ் காண்பிக்கப்படாது வழங்கல் மற்றும் சேவைக் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுகளின் போது கைதவிர்க்கப்பட்ட மற்றும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பௌதீக ரீதியில் காணப்படாததாக உறுதிப்படுத்தப்பட்ட ரூபா 658,020 பெறுமதியான சொத்துக்கள் மேலும் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்தாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

07 கணக்கு விடயங்களுக்குரிய உப அறிக்கை மற்றும் பேரேடுகளின் மீதிகளுக்கிடையே

ரூபா 314,639 தொகையான குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 131,968 தொகையான செலுத்த வேண்டிய 03 கடன்கொடுத்தோர் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதித்திகதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வழங்கல் சேவைகளுக்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 105,851 தொகையான வெளிநாட்டு முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதித்திகதி வரையிலும் உரிய பொருட்கள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 825,751 தொகையான வழங்கல், சேவைகளுக்குரிய 17 கடன்கொடுத்தோர் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபம் | 2013 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட பயன்படுத்தப்படாத ரூபா 2,994,823 தொகையான சொத்துக்கள் தொடர்பாக எவ்வித செயல் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2011 மார்ச் 07 ஆந் திகதிய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் RID/PAYE/REG/01 ஆம் இலக்க மற்றும் 2011 இன் பாதீட்டு முன்மொழிவுகள் | i. நிறுவகத்தின் கற்கைப் பதவியணியில் பத்தொன்பது (19) பேரிடமிருந்து 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 212,884 தொகையான உழைக்கும் போதான வரி குறைவாக அறவிடப்பட்டிருந்தது.<br>ii. நிலுவைச் சம்பளத்தின் அடிப்படையில் அறவிடப்பட்டிருந்த ரூபா 14,373 தொகையான உழைக்கும் போதான வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட காலப்பகுதியில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய ப்ரா/நிறுவனம்/11 ஆம் இலக்க தொழில் ஆணையாளரின் கடிதம் | கற்கைப் படிகள் வாழ்க்கைச் செலவுப் படியாக கருதப்படாமையினால் இந்தப் படிகள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஓய்வூதிய நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குமான பங்களிப்பிற்காக உரித்தாக்கப்பட முடியாதிருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் நிறுவகத்தின் கற்கை பதவியணியினருக்காக |

| | | |
|---|---|---|
| | | மேற்கூறப்பட்ட நிதியங்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்தப்பணம் ரூபா 1,002,418 ஆகும். |
| (ஈ) | இலக்க சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | நிதிப்பிரமணம் 110 | 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது 04 வாகன விபத்துக்கள் இடம்பெற்ற போதிலும் அவைகளைப் பதிவு செய்வதற்கு இழப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1978 திசம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | சுற்றுநிருப ஏற்பார்டுகளின் பிரகாரம் நிலையான சொத்துப்பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 2010 திசெம்பர் 31 ஆந் திகதிய 26/2010 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பொதுத் திறைசோரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரமின்றி தற்காலிக, அமைய, நாட்கூலி, ஒப்பந்த அல்லது உதவி அடிப்படையில் அரசாங்க சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்ய முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக சேர்க்கப்பட்ட 09 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 919,695 கூட்டுத்தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 2,285,906 பெறுமதியான 13 நாட்குறிப்புக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான பற்றாக்குறை ரூபா 28,164,597 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 24,050,040 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,114,557 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டில் நிலையான சொத்து விற்பனையினால் நட்டம் ரூபா 1,570,623 தொகையினாலும், முன்னைய ஆண்டின் சீராக்கல் ரூபா 2,396,227 தொகை மற்றும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 6,253,235 தொகையினாலும் அதிகரித்தமையின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பற்றாக்குறை ரூபா 4,114,556 இனால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 30 உத்தியோகத்தர்களினால் 1998 முதல் 2012 வரையான காலப்பகுதியில் நிறுவகத்தின் நூலகத்திலிருந்து பெறப்பட்ட 203 புத்தகங்கள் 02 முதல் 15 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதும் மீளக்கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சி/ பரிசோதனை செயற்பாடுகளுக்குரியதல்லாத 17 புத்தகங்கள் 1 - 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் 08 உத்தியோத்தர்களினால் தம்வசம் வைத்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 5.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாமல் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 9,144,000 கூட்டுத்தொகையான செலவினங்களைச் செய்து 08 நீர் சுத்திகரிப்பு அலகுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அதில் ரூபா 6,013,702 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட 05 நீர் சுத்திகரிப்புக்கள் ஒரு வருடத்தைக் கடப்பதற்கு முன் செயற்பாடற்றிருந்தது.

(ஆ) i. இலங்கை அடிப்படைக் கற்கை நிறுவகத்தின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான உடன்படிக்கையின் 16 ஆவது பிரிவின் பிரகாரம் நிறுவகத்தினால் சிற்றுண்டிச்சாலையின் முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தங்குமிட வசதிகளும், பொருட்களை வைத்துக்கொள்வதற்காக களஞ்சிய வசதிகளும் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உடன்படிக்கையின் 06 ஆவது பிரிவின் பிரகாரம் நிறுவகத்திற்கு வாடகை அறவிடப்படாது ஒப்பந்தக்காரருக்கு மாதாந்தம் ரூபா 25,000 படி மீளாய்வாண்டின் போது ரூபா 300,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் நிறுவகத்தினால் ஊழியர்களுக்காக தேநீர் வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது சிற்றுண்டிச்சாலை ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,190,003 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

ii. உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரரினால் நிறுவகத்திற்குரிய உபகரணங்களைப் பயன்படுத்துவதற்காக ரூபா 100,000 தொகையான காப்புறுதியொன்று வழங்கவேண்டியிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் ஒப்பந்தக்காரரிடமிருந்து அவ்வாறான காப்புறுதியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 விளைற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,312,752 பெறுமதியான 37 நிலையான சொத்து விடயங்களின் உபகரணங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அல்லது வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையின் காரணமாக விளைவற்றுக் காணப்பட்டது. மேலும், உடைந்த 04 பொருள் விடயங்களின் ரூபா 8,000 பெறுமதி தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இரசாயன பொருள் இருப்புக் களஞ்சியத்தின் இருப்பு மெய்மையாய்வு அறிக்கை பரிசோதனையின் போது ரூபா

548,555 பெறுமதியான 86 விடயங்கள் நீண்ட காலமாக அசைவுறாத இருப்பாக அவதானிக்கப்பட்டதுடன் அதில் ரூபா 220,625 பெறுமதியுடன் கூடிய 17 விடயங்கள் அதிகுளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்தது. இந்த விடயங்கள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 334,403 பெறுமதியான மெதுவாக அசையும் 67 இரசாயன பொருள் இருப்பு விடயங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2012 இன் தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நீர் சுத்திகரிப்பு செயற்திட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட வேண்டிய நீர் சுத்திகரிப்பின் 10 அலகுகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 02 நீர் சுத்திகரிப்பு அலகுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதற்கான ரூபா 2,341,472 தொகை 02 வருடமும் 06 மாதகாலமுமாக வங்கி நடைமுறைக் கணக்கில் செயற்பாடற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உதவி கணக்காளர் பதவியின் நியமனங்களை நிரந்தரமாக்கி பதவி உயர்வுகள் வழங்கி தவறான சம்பளப் படிநிலைகளைத் தோற்றுவித்து ஆட்சேர்க்கும் நடைமுறைகளுக்கு இணங்காத வகையில் சம்பளம் செலுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 415,794 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) படிக் கொடுப்பனவுகளுக்காக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது ஆராய்ச்சிச் சபையினதும் முகாமைத்துவ சபையினதும் செயலாளராக செயற்படுகின்ற ஒரு உத்தியோகத்தருக்கு ஒரு சபை அமர்வுக்காக முறையே ரூபா 1,500 மற்றும் ரூபா 2,000 படியும் சாரதிப் பதவிக்காக சேர்க்கப்பட்ட உத்தியோகத்தருக்கு சாரதி சம்பளத்திற்கு மேலதிகமாக அலுவலகச் செயற்பாடுகளுக்காக மாதாந்தம் ரூபா 2,000 படி மீளாய்வாண்டின் போது ரூபா 20,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) றைசோபியம் செயற்திட்டம்

(i) விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தினால் அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்திற்கு 2011 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தொடக்கம் கையளிக்கப்பட்ட றைசோபியம் செயற்திட்டத்தின் கீழ் சோயா அவரைக்காக ''றைசோபியம் ஆமுகுல'' உற்பத்திப் பெயரில் உலர்ந்த விசேட பசளைக்குரிய செயற்திட்டத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தருக்கு அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் நிதி ஏற்பாடுகளிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 505,500 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 2,860,767 தொகையான வருமானத்தை உழைத்து ரூபா 1,138,781 தொகையான செலவினங்களைச் செய்திருந்த போதிலும் இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் நோக்கங்களுக்குரித்தற்ற கொடுக்கல் வாங்கல்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாக கண்டறியப்பட்ட ''றைசோபியம் ஆமுகுல'' பெயரிலான திரவ பசளை உற்பத்திக்காக ஈடுபடுத்தப்பட்ட தும்புத்தூள் பயிர்நடும் மார்க்கத்தை கண்டறிவதற்காக பேடன்ட் அனுமதிப்பத்திரம் நிறுவகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால்

நிறுவகத்தின் ரூபா 2,533,800 தொகையான உற்பத்தியை சந்தையில் நேரடியாக விற்பனை செய்வதற்குப் பதிலாக 05 நிறுவனங்களின் மூலம் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

**4.5 வெளிப்படையான மோசடிகள்**

மீளாய்வாண்டில் நீர்ப்பட்டியல் கட்டணம் ரூபா 1,294,409 ஆக இருந்தது. மாதாந்த நீர்ப்பட்டியல் கட்டணச் செலவினம் ரூபா 27,668 முதல் ரூபா 137,110 வரையான வீச்சில் அசாதாரண அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

**4.6 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 2,360,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 111 A ஆம் இலக்க பசுமைக்கூடம் 2013 மார்ச் மாதம் அளவில் அதில் உள்ளடங்கியிருந்த வெப்பம் அதிகரித்தமையின் காரணமாக ஆகக்கூடிய செயற்திறமையாகவும், வினைத்திறமையாகவும் மற்றும் சிக்கனமானதாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற 05 ஆராய்ச்சி நிதியங்களின் ரூபா 512,796 கூட்டுத்தொகையான மீதி மீளாய்வாண்டின் போதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 நிச்சயமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**அங்கத்துவக் கட்டணம் செலுத்துதல்**

சஞ்சிகைகள் மற்றும் பருவகால சஞ்சிகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வெளிநாடுகளிலுள்ள பல்வேறு நிறுவனங்களிடம் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 72,112 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் சஞ்சிகைகள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் நிறுவகத்திற்குக் கிடைத்திருந்ததா என கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

**4.8 தாமதமான செயற்திட்டங்கள்**

05 நிர்மாணங்களுக்காக கட்டிடத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையிலிருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 1,782,802 தொகையான முற்பண மீதி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.9 ஊழியர் பணிக்கொடைப் பணத்தை முதலீடு செய்தல்**

ஊழியர் பணிக்கொடைக்காக நிறுவகத்தில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 15,640,909 தொகையை வினைத்திறனான முதலீட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் வருடாந்தம் நாளதுவரையாக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15

நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, திறைசேரி, வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் போன்றவைகளுக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், 2012 - 2015 இற்கான கூட்டிணைந்த திட்டம் அதன்படி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் 21 பகுதிகளை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 13 பகுதிகளுக்குரிய கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ஆ) முகாமைத்துவ கணக்காய்வு பணிப்பாளர் நாயகத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதிக் கணக்காய்விற்கு மேலதிகமாக முறைமைப் பகுப்பாய்வு, செயலாற்றல் பகுப்பாய்வு மற்றும் விசேட புலனாய்வுகள் தொடர்பாக கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளகக் கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 முகாமைத்துவத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல்**

பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 4.2 இன் பிரகாரம் மாதத்திற்கு ஒரு தடவை முகாமைத்துவ சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

i. மாதத்திற்குரிய செயற்பாட்டு அறிக்கை
ii. மாதத்திற்குரிய காசுப்பாய்ச்சல் கூற்று
iii. திரவத் தன்மை மற்றும் கடன்பெறல்
iv. மாதத்தின் போதான நடைமுறையல்லாச் சொத்துக்களின் கொள்வனவும் கொள்வனவு நடவடிக்கைகளும்
v. புதிய ஆட்சேர்த்தல்களும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடங்கியுள்ள மனிதவளம் தொடர்பான கூற்றும்.

**5.4 கணக்காய்வுக் குழு**

பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 7.4.1 இன் பிரகாரம் கணக்காய்வுக் குழுவின் மூலம் தமது அவதானிப்புக்கள் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் கணக்காய்வுக் குழுவில் பின்வரும் விடயங்கள் விடயப் பரப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

i. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பொறுப்புக்களை தீர்மானித்துக்கொள்ளலும் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்தலும்
ii. நிறுவகத்திற்குள் அமுல்படுத்தப்படுகின்ற சகல செயற்பாடுகளுக்கும் உரிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.
iii. பொது முயற்சிகள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள்/ வழிகாட்டல்கள் தொடர்பான மீளாய்வு
iv. இனங்காணப்பட்ட பழைய மெதுவாக அசையும் செயற்பாடற்ற இருப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான கூற்று.

**5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 5.2.5 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த பாதீடு கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் நீண்ட கால இலக்குகள் மற்றும் ஆண்டின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் வகையிலான உபகரணமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) வாகனப் பயன்பாடு
(உ) ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்
(ஊ) ஊழியர் முகாமைத்துவம்